**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 8/2020**

**Deposition of Witnesses for PW2**

| Name | : | திரு.**சந்திரமோகன்** | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **27.07.2023.**

முதல் விசாரணை

நான் தற்போது ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 12.11.2019ம் தேதி சேத்தூர் ஊரக காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தபோது மு.நி.கா போத்தி, மு.நி.கா. முருகேசன், மற்றும் நான் பார்ட்டி சகிதமாக காலை 10 மணிக்கு ரகசிய தகவல் கிடைத்தன்பேரில் சுந்தராஜபுரம் மாசாணி கோவில் தெருவில் கஞ்சா விற்பதாக தெரிய வந்து தகுந்த உபகரணங்களுடன் சென்ற போது எங்களை கண்டவுடன் சீனியப்பபன் மகன் கணேசன் என்பவர் ஓட எத்தளித்தவரை மேற்படி விசாரித்ததில் அவரை பிடித்து அவர் கையில் வைத்திருந்த பேஷன் வேல்ட் என்று எழுதப்பட்டிருந்த பிளாஸ்டிக் பையுடன் அதை பிரித்து பார்த்தபோது அதில் இலை, தழை, பூ வுடன் கூடிய கஞ்சா எனும் போதை பொருள் இருந்தது. அதை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது அதில் சுமார் 1.600 கிராம் கஞ்சா இருந்தது. அதனை 100 கிராம் பகுப்பாய்விற்காக தனியாக எடுத்து காக்கி கவரில் கட்டி, எஸ்.ஹெச்ஓ. சீல் வைத்தும் மீதமிருந்த கஞ்சாவை இன்னொரு பொட்டலமாக கட்டி, எஸ்.ஹெச்ஓ. சீல் வைத்தும் எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து கு.எண்.303/19 NDPS Act-ன் படி வழக்கு பதிவு செய்து தங்களது பார்வைக்கு வைத்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார். எதிரி கைது செய்த அறிவிப்பு **அ.த.சா.ஆ.2** ஆகவும், சோதனை சம்மத கடிதம் **அ.த.சா.ஆ.3** ஆகவும், நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. ( அ.த.சா.ஆ.2,3 எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனக்கு கிடைத்த தகவலை எழுத்து மூலமாக எழுதி உயர் அதிகாரியிடம் அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது எங்கு வைத்து யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றும், யாரால் எங்கு வைத்து பிரிணட் அவுட் எடுக்கப்பட்டது என்றும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரித்தபோது சோதனை சம்மத கடிதம் மற்றும் கைது குறித்தும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் பிரிவு 57ன் படியான விரிவான அறிக்கை எதுவும் தயார் செய்து அனுப்பவில்லை என்றால் சரிதான். மாசாணி அம்மன் கோவில் தெரு என்பது மிகப்பெரிய தெரு என்றால் சரிதான். அந்த தெருவில் எதிரியை எந்த இடத்தில் பிடித்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் பார்வை மகஜர், மாதிரி வரைப்படம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரியிடம் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம், கைது அறிவிப்பு ஆகியவை எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம், கைது அறிவிப்பு ஆகிவற்றில் சாட்சி கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் நேரத்தில் சொல்லும் விதத்தில் தகவல் வந்ததாக சொல்வது பொய் என்றும் அதன்பேரில் ரைடுக்கு சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அங்கு எதிரியை பார்த்தாகவும், எதரியிடம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் வழக்கு தோதிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்து மேலதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போதை பொருள் சட்ட விதிகளை முறையாக கடைபிடிக்காமல் எதிரிகள் மீது மேலதிகாரியின் தூண்டுதலின் பேரில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை வீட்டில் இருந்தவரை அழைத்து சென்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.